**பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
(அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் இணைவு பெற்றது)
**மதுரை சாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002.**

# கல்லூரி மாணவியர் பேரவைத் தேர்தல் 2023 – 2024

## அறிக்கை

02.08.2023 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் "மாணவியர் பேரவைத் தேர்தல்' நடத்துவது குறித்து, கல்லூரி முதல்வர் அருட்சகோதரி சிறுமலர், துணை முதல்வர் அருட்சகோதரி அமலிபுஷ்பம் அவர்களது ஒருங்கிணைப்பில் அனைத்து துறைப்பேராசிரியர் தலைவர்களும் இணைந்த கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. மாணவிகள் பல்வேறு பொறுப்புகளில் தலைமையேற்று கல்லூரி நிர்வாகத்தோடு இணைந்து செயல்பட ஊக்குவிக்கும் விதமாக இத்தேர்தல் கலந்தாய்வுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கூட்ட முடிவில், மாணவியர் பேரவைத் தேர்தலுக்கு கல்லூரி துணை முதல்வர் வழிகாட்ட, தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஆ.ஜோஸ்பின் செலின் மேரி ஒருங்கிணைப்பாளராக செயல்பட அனைவராலும் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாணவியர் பேரவைத் தேர்தலில் பங்கேற்கும் மாணவிகளுக்கான விதிமுறைகள் குறித்து முடிவெடுக்கப்பட்டன.

1.மாணவிகள் நடப்பு கல்வி ஆண்டு வரை அனைத்து தேர்வுகளிலும் முழுத் தேர்ச்சி வீதம் பெற்றிருக்க வேண்டும்.

2.வருகைப் பதிவேட்டில் 75% விழுக்காடு மேல் பெற்றிருத்தல் வேண்டும்.

3.ஒரு பதவி பொறுப்பிற்கு ஒரு துறையில் இருந்து ஒரு மாணவி மட்டுமே போட்டியிட வேண்டும்.

4.மாணவிகள் ஒழுக்கம் மற்றும் ஏற்கும் பணியில் ஆர்வமும் அக்கறையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

5.தேர்தலில் போட்டியிடும் மாணவிகள் தங்களது இலச்சினையை அறிமுகப்படுத்திக் கொள்ள வாய்ப்பும் வழங்கப்பட்டது.

21.08.2023 அன்று காலை 9.20 மணி அளவில் மாணவிகளுக்கான பொது வழிபாட்டின் இறுதியில் கல்லூரியின் துணை முதல்வர் அருட்சகோதரி அமலி புஷ்பம் அவர்கள், மாணவியர் பேரவைத் தேர்தல் குறித்து எடுத்துரைத்தார். 25.08.2023 அன்று 'மாணவியர் பேரவைத் தேர்தல்' நடைபெறும் என்றும், வேட்பு மனுத்தாக்கலுக்கான பதவிகள் குறித்தும், மாணவிகள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் குறித்தும் தமது உரையில் எடுத்துரைத்தார். அதன்பின் பேரவைத் தேர்தலில், பதவி பொறுப்புகளுக்காகப் போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவிகள் அதற்கான விண்ணப்பப் படிவத்தினை பெற்றுச் சென்றனர். போட்டியிடும் மாணவிகளுக்கு வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன.

22.09.2022 அன்று 9.30 மணி அளவில் மாணவியர் பேரவைத் தேர்தலுக்கு போட்டியிடும் மாணவிகள் தாங்கள் விரும்பம் பதவி பொறுப்புக்கான விண்ணப்பப் படிவத்தினையும் தங்களுக்கான இலச்சினையையும் கல்லூரி முதல்வர் அருட்சகோதரி சிறுமலர் அவர்களிடம் ஒப்படைத்தனர்.

23.08.2023 மற்றும் 24.08.2023 ஆகிய நாட்களில் மாணவியர் பேரவைத் தேர்தலில் பங்கேற்கும் மாணவிகள், தாங்கள் தேர்ந்தெடுத்துள்ள பொறுப்பு மற்றும் அதனை நிறைவேற்றுவதற்கான முறைகளைக் குறித்து துறைவாரியாகச் சென்று தங்களது வாக்குகளைச் சேகரித்தனர்.

25.08.2023 வெள்ளிக்கிழமை அன்று காலை 9.45 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை "மாணவியர் பேரவைத் தேர்தல்" நடத்தப்பட்டது. கல்லூரி கலையரங்கத்தில் வாக்குச்சாவடி அமைக்கப்பட்டது. பொதுத்தேர்தல் போல வாக்குப்பதிவானது வாக்குப்பெட்டிகள், பூத் சிலிப், விரலில் மை இடுதல் முதலான உபகரணங்களைக் கொண்டு நடைபெற்றது. 51 மாணவிகள் பல்வேறு பொறுப்புகளுக்கு போட்டியிட்டனர். பல்வேறு துறை மாணவிகள் தங்களது வாக்குகளை அமைதியான முறையில் அளித்தனர். மாணவிகள் தங்களின் வாக்குகளை பதிவு செய்து முடித்த பின்னர் பிற்பகல் 2.00 மணி அளவில் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது.

அன்று "மாணவியர் பேரவைத் தேர்தல்" போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டது. கல்லூரி செயலர் அருட்சகோதரி ஜோசப் செலின் அவர்களும், கல்லூரி நிர்வாகி பர்த்தலேமியு அவர்களும், கல்லூரி முதல்வர் அருட்சகோதரி சிறுமலர் அவர்களும், கல்லூரி துணை முதல்வர் அருட்சகோதரி அமலி புஷ்பம் அவர்களும் இணைந்து வெற்றிப் பெற்ற மாணவிகளுக்கு பதவிப் பொறுப்பிற்கேற்ற இலட்சிணை அணிவித்து சிறப்பித்தனர். மாணவிகள் தங்களது பதவிப் பொறுப்பிற்கேற்ற கடமையை திறம்பட ஆற்றுவதற்கான உறுதிமொழியையும் அளித்தனர்.

மாணவியர் பேரவைத் தேர்தலில் பல்வேறு பதவிகளுக்குப் போட்டியிட்டு முதலிடம் பெற்ற மாணவிகளின் பெயர்ப்பட்டியில் பின்வருமாறு:

| S. No | Post | Nominee's Name | Department & Year |
|---|---|---|---|
| 1 | President | N.Leela | III B.A.English |
| 2 | Vice President | Sr.Rabeeca | II B.A.English |
| 3 | Treasurer | V.Gowsalya | II B.Sc.Chemistry |
| 4 | Examination Secretary | A.Afrin Banu | II B.Sc.CS |
| 5 | Discipline Secretary | D.Kanimozhi | III B.Sc.Physics |
| 6 | Language Secretary | Sr.Ana Derencia | II B.Sc.Maths |
| 7 | Cultural Secretary | V.Rajeshwari | II BCA |
| 8 | Environment Secretary | P.Veeralakshmi | III B.Com CA |
| 9 | Transport Secretary | J.Dharani | I B.Sc.CS |
| 10 | Sports Secretary | J.Punitha Puristi | III B.Com |

பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
(அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் இணைவு பெற்றது)
மதுரை சாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002.

# கல்லூரி மாணவியர் பேரவைத் தேர்தல் 2023 – 2024



















